குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | மகாலிங்கம் த–பெ ராஜகோபால் | நாள்:07.09.2022 |
| வயது | | PW 4 |
| தொழில் | | STC:53/2018 |
| காவல் நிலையம் | | Cr.No.216/2017 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 07.09.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிள்ளை ரயிலடியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டு சாட்சி கையொப்பங்களில் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தினை தேதி நினைவில்லை. 2–3 வருடங்களுக்கு முன்பு கிள்ளை காவல் நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். பார்வை மகசரில் உள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது**

எதிரிகள் இருவரும் என் வீட்டிலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் சாளக்கரையில் வசித்து வருகிறார்கள். எதிரிகள் இருவரும் எனக்கு பழக்கமானவர்கள். எதிரிகள் எனக்கு பல வருடங்கள் பழக்கமானவர்கள். அ.சா.1 தரப்பினருக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை நடந்த அன்று நான் வெளியூர் சென்றிருந்தேன். போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. கடந்த 26.08.2017 அன்று மதியம் 16.30 மணிக்கு நானும் ஜெயராமன் என்பவரும் கிள்ளை ரயிலடி பிள்ளையார் கடையில் சாப்பிட்டுவிட்டு வெளியில் நின்றுக்கொண்டிருந்தபோது கிள்ளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் வழக்கின் சம்பவயிடமான மல்லிகா வீட்டு எதிரில் விசாரணை செய்ததாகவும் தாங்கள் தயார் செய்யவிருக்கும் பார்வை மகசருக்கு சாட்சிகளாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க நானும் ஜெயராமன் என்பவரும் சம்மதிக்கவே எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தில் வைத்து போலீசார் தயார் செய்த பார்வை மகசரில் நானும் ஜெயராமனும் சாட்சி கையொப்பம் இட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் நீண்ட கால பழக்கமானவர்கள் என்ற காரணத்தினால் எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியில்லை.

**குறுக்கு விசாரணை**

இல்லை

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/-Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram